சமயவாதிகளின் மரபுரைக்கும் சித்தரவழி ஞான உரைக்கும் கருத்துரையிலே மிகுந்த வேறுபாடு காணப்பெறுகிறது. இந்நூலில் வருகிற தலங்களின் பெயர்களுக்குக் கூட ஞானிகள் உட்பொருள் கூறுகிறார்கள்.

கீர்த்தித் திருவகவலின் மரபுவழி உரையானது வெளிப்படையான கருத்துரையே ஆகும். ஆனால் சித்தர்களின் உரை முழுமையும் இந்த உடம்பாகிய கோவிலை மையங்கொண்டு அமைகிறது. அத்தகைய உரையில் இருந்து மிகவும் நுட்பமான சில பகுதிகளை மட்டும் கீழே தருகின்றேன். இந்தப் பகுதிகள் கீர்த்தித் திருவகவலின் சில சொற்றொடர்களுக்கு ஆழமான உட்பொருளை வழங்குகின்றன.

சிவயோகியார் 'திருவாசகமும் சிவராஜயோகமும்' என்ற பெயரில் எழுதியுள்ள ஞான ஆய்வில் இருந்து சில பகுதிகள் வருமாறு:

மானிடர் தேகத்தில் இது அநாகதம் என்ற இருதயத்தைக் குறிக்கும். அங்கிருந்து அசைவினைச் செய்து கொண்டிருப்பவரும் ஈசானரேதான். அவர் தொழில் மயமாகச் சீவர்களை இயக்கும் போது ஐந்து நிலையிலிருந்து இயக்குவதாக ஆகமம் வரையறை செய்துள்ளது. அவைகள் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், நடராசர், இடபாரூடர், கல்யாண சுந்தரர் என்பனவாகும்.

சந்திரசேகரர்

சந்திரனை முடியில் தரித்து விளங்குபவர். சேகரம் - தலை, முடி, கூட்டம். சந்திரன் சுவாதிஷ்டானத்தில் விளங்கும்போது ஒரு கலையாக விளங்கும். சிரசின் நாதமாக விளங்கும்போது ஏழாவது கலையாக விளங்கிச் சக்தி பொருந்துமிடமாகும். இதன்மேல் பரையோகம், பரை போகம், பரையில் அதீதம் உள்ளன. இவ்வகையாகச் சந்திரன் 16 நிலைகளைத் தேகத்தில் வகிக்கிறான்.

சோமாஸ்கந்தர்

ஸக - உமா, ஸ்கந்தர் என்ற மூன்று உருவும் ஓர் உருவாகத் தியானிக்கும் முறை. இது கந்தபுராண தத்துவ விளக்கம். இவ்வுலகில் அறிவான சிவமும், ஆற்றலான சத்தியும் எல்லா மண்டலங்களிலும் நிறைந்துள்ளன. தூல உடலில் ஐம்முகச் சிவனார் அதோமுக சத்தியுடன் ஒன்றுபட்ட மேலெழும் சோதியில் சிவம் சத்தி ஸ்கந்தர் மூன்றும் பிரிப்பின்றி உள்ளது என்ற கொள்கை.

இது காலத்தாற் பிற்பட்ட சமய எழுச்சி நிலை. இதன் வழிபாடும் இல்லற நெறியைத் தழுவியதே. திருவாரூர்த் தியாகராசர் சோமாஸ் கந்தர் மூர்த்தமேதான். எவ்விதம் சிதம்பர ரகசியம் அமைத்துள்ளார்களோ அவ்விதமே இங்கும் சில இரகசியங்கள் வைத்துள்ளனர்.

நடராசர்

கூத்தப் பெருமான் நடனஞ்செய்வது அசைவனவற்றுள்ளும் அசையா தனவற்றுள்ளுமாகும். அத்தகைய ஆகாயமே ஆதிப்பிரானது

திருவடியாகும். அவ்வாகாயம் பிராண சத்தியான நீரையும் ஒளியையும் கொண்ட மண்டலமாகும். இந்த ஆகாய விளக்கமே பஞ்சாக்கரமாகும். இவ்வகையாக விளங்கும் கூத்தப்பெருமான் பஞ்சாக்கரமாகும். இவ்வகையாக விளங்கும் கூத்தப்பெருமான் விளக்கமே இங்கு அறியத் தக்கது.

இடபாரூடர்

சைவத்தில் இடபத்தை உயிர் என்பர். வேதத்தில் வாக்கு கம்பீரமாக ரிஷப கர்ஜனம் போல் உள்ளதால் வாக்கை ரிஷபமாகக் கூறப்பட்டுள்ளது. உயிரின் வெளிப்பாடும், வாக்கின் வெளிப்பாடும் சிரசின் மேலுள்ள ஆகாய மண்டலந்தான். இது ரிஷப வாகனத்தையுடைய சிவபெருமானைக் குறிக்கும். இதன் தத்துவமும் சிரசில் வெளிப்படுவதுதான்.

கலியாணசுந்தரர்

இது சிவசக்தி மணக்கோலத்தைக் குறிப்பிடும் அவசரம். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சத்தி சூரிய மண்டலத்தைக் கடந்த பிறகு தருணி என்றும், சகஸ்ரதளத்தை அடைந்தபோது பதிவிரதை என்றும் கூறப்படுவாள். இவ்விதமான மணக்கோலத்தைக் நடத்தி வைப்பவர் பிரமனும், மணப்பெண்ணைக் கொடுப்பவர் திருமாலும் ஆவர். இது துவாதசாந்த வெளியாகும். இவ் வைபவத்தை அமைத்துக் காட்டும் தலம் மதுரை ஆகும். துறவி வழிபடும் ஆனந்தக் கூத்தனும் இல்வாழ்வான் வழிபடும் கால்மாறி ஆடிய கூத்தப்பெருமானும் அங்கு இடம் பெற்றுள்ளனர். மதுரை சத்திப் பிரபாவம் பொருந்திய தலமாகும். பிரணவ கலைகள் 64க்காக 64 புராணக்கதைகள் அமைத்துள்ளனர். திருமணக் கோலவழிபாடு சாக்த மத தத்துவத்தைக் கொண்ட சமய மதத்தினர் வழிபாடு. சாக்த சமயத்தில் இதைத் துவாதசாந்த வெளி என்பர். திருவிளையாடற் புராணமும் அவ்விதமே கூறுகிறது. இவ்விதம் வேறுவேறு பெயர்களால் பெயர்களும் வழிபாடும் இருந்தாலும், இவை எல்லாம் சிரசின் மேலுள்ள ஈசானரை வழிபடும் முறைகளேயாகும்.

மீனின் கண் மற்ற எந்த ஜந்துக்களின் கண் போன்றும் உறங்கும் போது மூடிக்கொள்வதில்லை. எப்போதும் விழித்த கண்ணுடையவள் என்ற கருத்தை மீனாட்சி என்னும் பெயர் விளக்குவதாகும். அகஷிமார் கத்தினர் எப்போதும் அகநோக்கம் உடையவராக இருப்பதே இதன் கருத்தாகும்.

தில்லை - சிதாகாய இருள் மண்டலம். மூதூர் - பழமையான ஊர். அதுவே பிறப்புக்கும் இறந்த பின்னடையும் இடமான சீவவொளி பொருந்திய அண்டாகாயம். இதுவே தில்லை என்றறிக. அதாவது அண்ட கோச இருளே தில்லையால் குறிக்கப்பட்டுள்ளது என்று அறிக.

மாமலை என்பது பெருமையுடைய பிரணவ மேருவாகும். அதுவே கீழ்முதல் மேல்வரையில் வியாபித்துள்ள மலைபோன்ற தத்துவமாகும். அதுவேதான் இருட்டையும் ஒளியையும் உள்ளடக்கி நிற்பது. அதனால் மகேந்திர மாமலை.

பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்

என்ற வரிகளிலே பள்ளி என்பது கோவிலுக்குப் பெயர். ஆத்மா அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற ஐந்து கோசங்களைக் கொண்டு வாழ்கிறது. ஆத்மாவை விட்டு நீங்காத சிவமும் சத்தியும், அவ்விதமே ஐந்து தேகத்திலும் பான்மொழி என்ற நாத சத்தியுடன், குறைவில்லாது பொருந்திச் சீவனது விருப்பத்திற்கு ஆற்றலை அளிக்கும்.

இந்திர ஜாலம் என்றால் ஒரு பொருளை மற்றோர் பொருளாகக் காட்டுதலோ, ஒன்றுமில்லாத இடத்தில் ஒன்றை உண்டாக்கிக் காட்டுதலோ செய்தல். அதுபோலவே ஸ்திரீயுடன் பொருந்திக் காமசெயம் செய்வதில் காமம் பொருந்தும் உடற்கூறுகளையெல்லாம் மாற்றிக் கொண்டு இன்ப வடிவினனாக எழுந்தருளினன்.

இமயத் தியல்புடை அம்பொற் பொலிதரு புலியூர் - இமயம் போன்று உயர்ந்து விளங்குவதும், பொன்னொளியுடன் கூடினதும், தன்னை யடைந்தாரை மீளத் திரும்பாதவாறு செய்வதும், பிரணவ சமாதியாகும். பிரணவத் தலைவன் பசுக்களுக்குத் தலைவரான சதாசிவர் ஆவர்.

புலியூர் - புலிக்குகையை அடைந்தவர் மீளாது போவர்; அது போலப் பிரணவ சமாதி யுறுவோர் மீண்டும் பிறவிக்கு வாரார்.

உமை - சித்சத்தி.
காளி - குண்டலினி சத்தி.

இங்கு காலரூபமான சத்தி காளி எனப்பட்டது. இவள் வாயு பூதத் தலைவி.

சமாதி நிலையில் கால செயமும், அறிவின் விருத்தியும் உள்ள படியால் 'உமையொடு காளிக் கருளிய சிறுநகை' என்று கூறப்பட்டது.

தோற்றம் எங்கு உள்ளதோ அங்குதான் லயமும் சென்று முடிய வேண்டும்.

கீர்த்தித் திருவகவல் 'தில்லை மூதூராடிய திருவடி' என்று தொடங்கி, 'பொலி தரு புலியூர்ப் புக்கினி தருளினன், ஒலிதரு கயிலை யுயர்கிழ வோனே' என்று முடிகிறது. தோற்றமும் முடிவும் ஒரே இடம் என்ற உண்மையைப் புலப்படுத்தும் நயம் கண்டு மகிழ்க.

★ ★ ★

9. திருவண்டப் பகுதி

(சிவனது தூல சூக்குமத்தை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்

சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்

தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாடொறும்
சுருக்கினிற் சோதி அமைத்தோன் திருத்தகு

மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

மண்ணிற் றிண்மை வைத்தோன் என்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க

அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க
பிரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்கால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

சித்தமுஞ செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
வரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுந்தருந் தன்மையி லையோன் காண்க

இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் புணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க

தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானும் கண்டேன் காண்க
அருணனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்பரை யஞ்சலி காந்தள் காட்ட

எஞ்சா இன்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தான
ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாகக் கரைபொரு தலைத்திடித்

தூழு ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்
துருவ அருணீர் ஒட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள் மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவர் ஆரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதில்எம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி, நாற்றிசை
நடப்பன நடா அய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச் செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந்திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

ஊற்றிருந் துள்ளங் களிபோன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறன் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

இந்தத் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறும் இன்றே பயிறொறும்

ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்

தன்னே ரில்லோன் தானே யானதன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பெண் ருக வோலமிட்

டலைகடற் றிரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்

ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்

ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
கடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்

கருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் நிரைபுரைவித்
துவாக்கட னள்ளூநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிற்ந் தமுதம் மயிர்க்கால் தோறும்

தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்றழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ

துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்றென் கலக்க

அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

திருவாசகத்தின் இந்தப் பகுதி சித்தர்களின் தத்துவ இலக்கியத்திற்கு ஒரு கவிச்சான்றாக அமைந்துள்ளது.

என்னுடைய ஞானாசிரியர்களான சிக்கனம்பாறை தவத்திரு கண்ணப்ப சுவாமிகளும், சிவயோகி இரத்தின சபாபதியாரும், சித்தர்களின் ஞானப் பயிற்சிகளுக்கு உரிய பாடங்களை நடத்தும் பொழுதெல்லாம், திருவண்டப் பகுதியிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் கூறுவதுண்டு. மரபு வழியிலே இந்தப் பாடலுக்கு நாம் கொள்கிற பொருளில் பிசகொன்றும் இல்லை. ஆனால் இந்தச் செய்யுளின் கருத்துக்களிலே உள்ள தத்துவங்கள், எத்தனை ஆழமானவை என்பதை அறிந்து கொள்வதற்குரிய பூட்டின் திறவுகோல், ஞானிகளிடமே உள்ளது. அதிலும் திருவண்டப் பகுதியிலே பல ஞானப் பூட்டுக்கள் 'சிக்கென'ப் பிடித்துக் கொண்டுள்ளன. இவற்றைத் திறப்பதற்குரிய திறவுகோல்கள் குருவின் நேர்முக வாயிலாகவே பெறவியலும். எனினும் ஆய்வு முறையிலே உரைவிளக்கமாகச் சிவயோகியாரின் குறிப்புகளிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறேன். திருவண்டப் பகுதியைச் சித்தர்களின் கண்கொண்டு பார்ப்பதற்கு முன்பாக, இந்த விளக்கங்களை மனத்தில் வாங்கிக் கொண்டால், மணிவாசகர் நமக்குக் காட்டுகிற உலகம் எத்தனை பெரிய அகஉலகம் என்பது புலப்படும். அந்தச் சில பகுதிகளைத் திருவண்டப் பகுதிக்கு ஒரு முகமன் உரையாகக் கொள்ளலாம். அந்த முகமன் வருமாறு:-

"உயிர் வாழும் ஜந்துக்களுக்குக் காணும் பகுதி தூல உடலாகும். புறக்கண்ணுக்குக் காணமுடியாத சூக்குமை உடல் உள்ளது. சூக்குமம் காரணமாயும், தூலம் காரியமாகவும் உள்ளது. தூல உடலைப் படைக்கும் தேவர்களும், குணத்தைப் படைக்கும் தேவ வர்க்கமும், படைத்தவைகளை அழிப்பதைச் செய்யும் தேவ வர்க்கமும் உள்ளனர். படைப்பில் செயல்படுவது பிரமனைத் தலைவனாகக் கொண்ட தேவ வர்க்கமாகும். இவர்கள் பூதாகாயத்தில் தொழிற்படுவர். குணம் பற்றிய திருமால் குணமாகிய ஆகாயத்தில் தனது தேவர் கூட்டத்தில் தொழிற்படுவர். உருத்திரர் குணரகித ஆகாயத்தில் தனது தேவர் கூட்டத்துடன் தொழிற்படுவர். இவைஅல்லாத சூரியாகாயம் சித்தாகாயம் ஆகிய ஆகாயக் கூற்றிற்கு மகேசனும் சதாசிவரும் உள்ளனர். இவர்கள் எல்லாம் ஆகாயத்திலுள்ள அணுக்களினூடே சங்கல்பத்தால் தொழிற்படுத்துபவர்கள். அண்டம் என்றால் ஆகாயம் என்று பொருள். ஆகாய அணுக்களின் பரிமாணம் சூரிய கிரணத்தைப் போல நுண்ணியவை என்று குறிப்பிட்டுள்ளார் திருமூலர். ஒரு பசுவின் உரோமத்தை ஒரு கோடியாகப் பிளந்தால், ஜீவாணுவின் பிரமாணம் என்றார். இத்தலைப்பு ஆகாயக் கூற்றை விளக்கும் பகுதியாகும். ஆகாயத்திலே தேவர்கள் இருந்து உயிர்களைத் தொழிற்படுத்துவதால் இத்தலைப்பு 'திருவண்டப் பகுதி' எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. தூல உடலைத் தாங்கும் சூக்குமை ஆகாயத்தைப் பற்றிய விளக்கம் இத்தலைப்பில் விளக்கப்படுகிறது.

ஆராயுமிடத்து மனிதரின் ஆகாயக் கூறாலாகிய அண்டாகாய அணுக்கள் அளவிட்டுச் சொல்ல முடியாதனவாகும். அவை குவிந்துள்ள நிலைமையையும், அழகிய ஒளித்தோற்றத்தையும் ஒன்றுக் கொன்று தொடர்ந்து நின்ற அழகைச் சொல்லுமிடத்து, அவை நூற்றொரு முடிபுகளைக் கொண்டு செல்வனவாகவும், கீழும் மேலும் சென்றுகொண்டிருப்பனவாகவும் இருக்கின்றன.

வீட்டில் நுழைகின்ற சூரிய கிரணத்தைப் போன்ற நெருங்கிய அணுக்களில் நுண்ணியனாய்ப் பெரியோனான சிவம் அறிவுருவாய் விளங்கினன்.

பிரமனைத் தலைவனாகக் கொண்ட பூதாகாய இயக்குநர் ஆகிய தேவர்களையும், திருமாலைத் தலைவனாகக் கொண்ட மிகுந்த கூட்டத்தோடு கூடிய குணமய ஆகாயத் தேவர்களையும், உலகிற்கு உற்பத்தியையும் நிலைபெறுதலையும் செய்யும் தேவர் கூட்டத்துடன் இறுதியைச் செய்யும் உருத்திர கணத் தேவர்களையும், இறுதியை அடையச் செய்யும் மிகப்பெரிய ஊழிக் காலமும், அவ்வழியினின்றும் மீளப்படைப்பவனும், மீள முன்போல் பூமியில் நிலைபெறச் செய்பவனும், சூக்குமை தேகத்தையும் தூல தேகத்தையும் வீசுகிற சூறைக் காற்றால் வீசப்படுவதில் அகப்பட்ட பொருள்போல, அவைகளின் நிலையைச் சுழலச் செய்பவனும் ஆகிய அழகன்.

உலகம் பல வேறுபட்ட யோனிகளாய் உள்ளது. ஒவ்வொரு பிரமனும் ஒவ்வொருவகை சிருஷ்டியில் ஈடுபடுகின்றனன். அவ்விதமாகப் பலவேறுபட்ட பிரமர்களைத் தகுதிநோக்கி அவ்வப்பதவியில்

வைத்தது சிவமேயாகும். சிருஷ்டித்தவைகளைப் பாதுகாக்கப் பல காப்புக் கடவுளார் தேவைப்படும். அவ்வகையான காப்புக் கடவுளர்களைப் பதவியில் அமைத்தது சிவமேயாகும்.

காத்தவைகளை அழிக்கும் நியதியால் தொழிற்படுத்த, அநேக உருத்திரர்கள் தேவைப்படும். அவ்வாறான அநேக உருத்திரர்களைப் படைத்தவன் சிவமேயாகும். இவ்விதமான முத்தொழில் நியமனம் செய்பவன் சிவமேயாயினும், அவன் இவ்வாறு என்று சங்கற்பம் செய்து அமைக்கவில்லை. சந்நிதான மாத்திரத்தில், அவரவர் பக்குவத்திற்கேற்ப, அவை அவை நடைபெறுகின்றன.

சிறப்புப் பொருந்திய அறுவகைச்சமயத்தைச்சார்ந்த அறுவகைச் சமயம் பற்றியவர்க்கும், வீடுபேற்றை அளிப்பவன் சிவபெருமான் ஒருவனே ஆவர். ஏனெனில், சமயம் படைத்த பெரியோர்களின் ஆற்றலையும் சிவத்தையும் ஒப்புநோக்கும்போது, சமயங்கண்ட பெரியோரகள் பேரறிவுப் பொருளான சிவத்தின்முன் புழுப் போலாவர்.

இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன

திருமூலர் இக்கருத்தை மிகத் தெளிவாகப் புறச்சமய தூஷணம், நிராகாரம், உட்சமயம் என்ற தலைப்புக்களில் விளக்கியுள்ளார். சமயம் சாமானியர்க்கு வேண்டப்படுவதே. ஆன்ம ஞானிக்குச் சமய மில்லை என்ற முடிவேதான்.

எல்லாச் சமய முடிவையும் வகுத்தவர்கள் அமரத்துவம் பெறாதவர்களேதான். தேகத்தில் உள்ள தலைவனை எங்கு சென்று தேடி அறிவது? அறிந்தவர்க்கு அவரவர் பக்குவத்தில் வெளிப்பட்டுருளுவன். எல்லா உருவமும், அகண்டத்தின் முன் ஒரு புழுப்போலச் சிறியனவாகவே கருதப்படும்.

காண்டற்கு அரிய சிவாதித்தருக்கு நாள்தோறும் ஒளிபெருகச் செய்தோன்; மனிதர்களிடம் திருந்தவேண்டிய பண்புகள் அமைய வேண்டும்; அவ்விதம் திருத்தும் முறையில் சந்திரமண்டலம் அறிவு பெற்றுச் சாந்தி பெருகும்படி செய்தோன்; வலிமையுடைய அக்கினிக் கூறில் வெப்பு மண்டலத்தை அமைத்தோன்.

காணப்படும் எவ்வுயிரும் மாயையின் தன்மையை யுடையவை என்றறிய, ஆகாயத்தில் சூக்கும ஒளி உருவை அமைத்தோன், மேன்மை பொருந்திய மனிதரிடத்து இனிய சுவையைப் படைத்தோன், மாயையினின்றும் வெளிப்பட்ட மண்ணிடத்து வலிமையை அமைத்தவன், இவ்வாறாக எந்த நாளிலும் எவ்வளவு பல கோடியாகியவைகளிலும், எவ்வளவோ பல பொருள்களிலும், அவ்வவற்றின் தன்மையை அவ்வப் பொருள்களிலும், அமைத்து வைத்தவன்.

புறத்தே உள்ள பௌதிகச் சூரியனிடம் ஒளி இயல்பாகவுள்ளது. அது நாள்தோறும் ஒப்படைக்கப்படுவதில்லை. மனிதனின் ஆன்ம சூரியனேதான் தினந்தினம் ஒளிபெருகச் செலுத்தப்படுவது. அது போலவே மனிதனிடம் உள்ள நற்பண்புகள் பெருக்கமுறும் வகையில் செலுத்தப்படுவதைத்தான் 'திருத்தகு மதி' என்று கூறப்பட்டுள்ளது. பக்குவம் பெறாதுள்ள நிலையில் கீழுள்ள அக்கினி மண்டலம் தகிப்பதைத் 'திண்திறல் தீயில் வெம்மை செய்தோன்' என்று கூறப்பட்டுள்ளது. சீவனுக்கு ஆகாயப்பற்று மிகுந்தபோது, புறத்தே செல்லும் அறிவுகளை ஆகாயத்தில் கலக்குமாறு செய்தவன். சீவன் புறநோக்கம் உள்ளபோது பிராண கதியை ஒருவிதமாகவும, அகநோக்குக் கொண்டபோது வேறுவிதமாகவும் சலிக்கச் செய்தவன்.

ஆகாயக் கூறில் விளங்கும் சீவனை அறிய, சீவனின் பூமிக்கூறு புறநோக்குதலில் சலிக்காது திண்மையாய் இருக்குமாறு செய்தவன். அதாவது ஜெயத்தை அறிந்தவன்.

இவ்வாறாக எவ்வளவோ சீவகோடிகளுக்கும், அவை அவைகளிலும் பொருந்தி, அவை அவை வளருமாறு, இயல்பினை அமைத்துக் கொடுத்தவன் சிவமேயாகும். இவ்விதமான இயல்பினை மனிதனுக்கு உண்டாக்கிக் கொள்ள இயலாது.

ஆகாயம் பூதாகாயம், குணமய ஆகாயம், குணரகித ஆகாயம், சூரியாகாயம், சித்தாகாயம் என்று ஐவகையாக உள்ளது. சீவனுக்குத் தகுதிநோக்கி எவை எவைகளுடன் பொருத்தவேண்டுமோ அவ்விதம் பொருத்தும் நியதிக்குத் தலைவன் சிவமேயாகும்.

கற்பகம் என்பது ஒரு பெருங்கால அளவு. நானூற்றுமுப்பத்தி இரண்டு கோடி வருடம் கொண்டது பிரமனது ஒரு நாள். அவ்விதம் நூறாண்டு கொண்டது ஒரு பிரமன் ஆயுசு என்பர். அநேகம் பிரமர்களைக் கொண்ட சிவம் என்னும்போது, அவன் கற்பத்தால் கணக்கிடும் முதல் சிருஷ்டியையும் முடிவான இறுதியையும் கண்டு கொண்டிருப்பவன் என்பது தெளிவாம்.

இந்திரிய மயக்கம் உள்ளவரையில் பிறவியின் சங்கிலிப் பிணைப்பு உண்டு. இந்திரியங்கள் தொழிலற்றபோது பிறவியின் எல்லையும் முடிவுறும். அதனால் 'எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து' என்றார். 'நீ பிறந்தது போதும்; பல பிறவி எடுத்து வருந்தி விட்டாய்; இனிமேல் பிறக்கவேண்டாம்' என்றபடி!

இந்திரியங்களின் வழிச்செல்லும் மனத்தைக் கட்டும் இடம் ஒன்று வேண்டும். அதுவே 'மாப்பெருங் கருணையின் முழங்கி முரசு எறிந்து' எனப்பட்டது. இதைத் திருவடி பற்றல், நாத சம்மியம், திருச்சிலம்போசை வழிநிற்றல் எனப் பலவாறாகக் கூறுவர். இதைப் பரையோகம், பரைபோகம், பரையில் அதீதம் என்றும் கூறுவர். நாதசம்மியத்தால் அகப்பார்வையில் மனம் பதிவதைப் பக்தர்கள் சிவபூசையில் சிரசின் மேல் கையை விரித்தும் குவித்தும் துவாதசாந்த வெளியில் வைப்பதுபோல் விளங்குவதில் அங்கு ஒரு பச்சை ஒளி தோன்றும்.

காந்தள் - கார்த்திகை பூ. இது மஞ்சளும் பச்சையும் கலந்த ஒளியாக விளங்கும்.

இந்த நிலையில் கடைக்கண்களில் நீர் துளிக்கும். இது அன்பின் அறிகுறி. இவ்விதம் பொருந்தும்போது மூலாதாரத்தில் காம வாயுவான செவ்வொளி சிரசைச் சூழ்ந்தும், அதன் மேலும், சென்று விளங்குவதில் ஆறு ஆதார பத்மங்களில் பிரவாகமெல்லாம் சுழுமுனா நாடியில் பொருந்தி ஏகவெளியாய் விளங்கிற்று.

ஆடியகால் என்பது கூத்தப்பெருமானின் இடது பாதமாகும். ஊன்றிய கால் வலது பாதமாகும். ஓசையுண்டாவது தூக்கிய காலினால்தான். இடக்கண் பார்வையை வலப்புறமாக மேலேற்றி நில் என்பதே திருவடியின் பொருள். இதனால் பெறப்படுவதைக் கைகளின் குறிகளால் உணர்த்தப்பட்டது காண்போம். இடக்கையில் கீழுள்ளது தூக்கிய இடக்காலையே சுட்டி நிற்பதாக உள்ளது. இது யானைத் துதிக்கை போன்று உள்ளதால் கஜ ஹஸ்தம் என்பர். மற்றொருவகை இந்த நிலையில் நிற்பதை அறிந்தால் நீ காப்பாற்றப்படுவை என்ற பொருளுடைய அபய ஹஸ்தமாகும். இதன்மேல் உள்ள இடக்கை அக்கினியை ஏந்தியுள்ளது. முன்னர், இடநாடிக் காமக் கலையாகத் தொழிற்பட்டபோதுமூல வாயுவாக இருந்தது. காமத்துக்குக் கீழப்பார்வை இயல்பு. கண்பார்வை மேனோக்கிய போது, காமமும் செயலற்றுக் காமாக்கினியே ஆன்ம தேஜஸாக மாறியது என்று பொருள். இதையே விந்து மண்டலம் என்ற பேரால் கூறுவர். இதனுடன் தொடர்பாகவே முன்னோ பின்னோ சிரசில் நாதம் உதிக்கும். நாதம் சிவஞானத்தால் அமைவது பிங்கலா நாடியில் உணர்த்தப்பட்டது. கூத்தப்பெருமான் திருக்கையில் உள்ளது உடுக்கையாகும். கூத்தன் திருமுடியில் உள்ளது ஆகாய கங்கை. இந்த அருளில் சாதகன் திளைப்பான் என்ற கருத்து. இவ்வகையாக அகரகலை, உகரகலை என்ற இரு நாடிகளால் அமைந்த பிரணவமே திருவாசி; இது சிவனின் அண்டகோசமாகும். இதுவே எட்டும் இரண்டும் உருவான இலிங்கமாகும். குண்டலினி மேலேறுவதில் வாயு ஊறுவது போன்ற ஒரு உணர்விருப்பதால், தேகமெங்கும் பாம்பை ஆபரணமாகக் காட்டப்பட்டுள்ளது. சந்திர மண்டல உதிப்பு தோளுக்கு மேல் அமைவது. இதைச் சோமவட்டம் என்பர். சந்திர தீபம் என்ற பேரால் கூறப்பட்டது. சந்திர தீபத்தின் அறிவை உணர்த்துபவன் சிவமேயாகும். பலர் குப்த வித்தை என்ற விஷயத்தை வெளிப்படையாகக் கூறவில்லை. தெளிவாகக் கூறினாலும் உணர்த்தினாலன்றி உணரப்படாத விஷயமாகும்.

சீவவொளி உருவம் பற்றியபோது ஒளியற்று இருள் போலவே விளங்கியது. அமூர்த்தி சாதாக்கியம் விளங்கியபோது, தானே ஆகாய மயனாய்த் தேகம் தன்னிலும் வேறு என்ற அறிவு உதித்துவிடும். சீவவொளிக்கு அகண்டத்தன்மை அருளியது சிவம். அதில் விளங்கியது சிவசக்தியாதல் பற்றித் 'தன்னேரில்லோன் தானேயான தன்மை' என்று கூறப்பட்டது.

நாத தத்துவம் என்பது எவ்விதம் தொழிற்படுகிறது என்பதை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விளக்கியுள்ளார்.

1. ஒரு கம்மியன் தனக்கு வேண்டியவாறு ஒரு உலோகத்தைச் செய்ய அளவிட்டுக் காய்ச்சி, பட்டறையில் அடித்து, கம்பி இழுத்துத் தொழிலுக்கேற்ற முறையில் செய்து கொள்ளுகிறான். இதற்கு முதல் நிலை உலைக்கள அக்கினியாகும். அதுபோலச் சித்தாக்கினி குண்டம் என்ற சிரசில் ஞானாக்கினியால் உண்டாவது நாத்வொளியாகும்.

2. அவ்வொளியையுடையவன் சீவனாயும் எழுப்புவோன் சிவமாயும் உள்ளது. அதனால் சீவன் பெண்தன்மை பெற்று ஆணுடன் அணைய விரும்பும் வேட்கைபோல் சீவன் விரும்பினபோதெல்லாம் சிவம் புணர்கிறது.

3. புணர்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது, அவ்வின்பத்தில், சூழ் நிலையை மறத்தல் இயல்பு. அதுபோல் சிதாகாயத்தில் ஓயாது அலைமோதுதலைப் போன்ற கோஷம் அமைவதில் மூலாக்கினி சிரசை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறபடியால் கீழுள்ள இன்பசுகம்போல மேலேயும் ஒரு சுகநிலை அமைவதில் தாவுநிலை உடைய மனம் ஒருருவப் பற்றும் இல்லாதபடியால் இந்திரியங்களின் தலைவனான மனம் நிலைகுலைந்ததுடன் தனது இருப்பையும் மறந்தது.

முன்னர்க் கூறியபடி எனக்கு எளிவந்த கருணையின் பெருமையை யான் சொல்லுமாறு அறியேன். அவனை வழுத்தும் முறைமையையும் அறியேன். நாய்போன்ற இழிகுணமுடைய என்னைத் தானாக மாற்றி அமைத்தது என்ன காரணம் என்பதையும் நான் அறிய மாட்டேன். என்ன ஆச்சரியம்! உடலைக் கடந்து விட்டேன். அது எவ்விதம் செய்தனன் என்பதையும் அறியமாட்டேன்.

அந்த ஆனந்தத்தைப் பருகியும் நிறைவு பெற்றிலேன். முழுதுமாய் விழுங்கவும் முடிந்திலேன். செழுமையான குளிர்ச்சி பொருந்திய பாற்கடலின் அலைகலைபோல, சிதாகாயத்தில் சந்திர மண்டல ஒளியை அசைத்துக் கொண்டிருந்தன. நிறைமதி நாளில் பெருகும் கடலின் நீர் போல எனது சிதாகாய உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கிக் கொண்டிருந்தது. மனம் எண்ணுவதைவிட்டு நின்றது. தேகத்தையும் தேகத்தைச் சூழவும் அமுதமய ஒளி நிரம்பியது. அது என் ஒவ்வொரு ரோம கூபத்தினின்றும் பாய்வதைக் கண்டேன். நாயினேனது உடலில், எனது தேகத்தையே இருக்கையாகக் கொண்டு கொடியேனுடைய மாமிசம் தழைத்த இவ்வுடலில் முற்றிலும் இனிமையான தேனைப் பாய்ச்சினன்.

நிறைந்த ஆச்சரியம் மிக்க ஒளிக்கிரணங்களால் எலும்பை ஊடுருவும்படி செய்தனன். அவன்பால் அன்புகொண்டு உருகும் ஆனந்த மய கோசத்தை அமைத்து, அவ்விடத்து எனக்கு நித்தியானந்தத்தை அனுபவிக்குமாறு நித்திய தேகத்தைக் கொடுத்தருளினன். அது எது போலும் எனில், சிறந்த விளாங்கனியில் வேழம் என்ற பூச்சி பழத்தை உண்டு ஓட்டினை நிலைகுலையாது வைத்திருப்பது போன்று, எனது காரண தேகத்தை நிலைநிறுத்திக் காரியமான தேகத்தை அழித்து, உலகம் உள்ளளவும் என்னையும் அவனடியாக்கி இருப்பதாக்கினன்.

விளங்கனியை உண்ணும் புழுவை யானையின் பரியாய்ப் பேரால் 'வேழம்' என்று கூறுவர். 'ஒள்ளிய கன்னல் கனிதேர் களிறு' - சிறந்த சுவைமிக்க விளாங்கனியை வேழம் என்ற பூச்சி உள்ளுள்ள சதைப் பகுதியை உண்டுவிடடு ஓட்டை மாத்திரம் உருக்குலையாமல் வைத்திருக்கும்.

எனது ஆகாயக் கூறான சீவனில், கருணை மிக்க அவனது ஆகாய விருப்பம் கலக்க, அவனது சத்தியுடன் மேலான ஒளிமயமாகப் பிரமன் மாலறியாத பரமன் செய்தருளினன்.

செத்தேன் - என்றால் உடலைக் கடந்து அறிவுடன் பிரிந்து விட்டேன் என்றபடி. திருவாசகம் 'செத்திலாப்பத்து' அறிக.

பௌதிக சந்திரனுக்கும் கடலுக்கும் சம்பந்தம் உள்ளதுபோல் ஆன்மீக சந்திர மண்ட ஒளிக்கும் சீவனுக்கும் சம்பந்தம் உண்டு. வாக்கிறந்து எண்ணுவதை நீக்கி, எண்ணமே செயலாகும்போது வாக்காக மாறுகிறது. எண்ணற்ற அன்பில் வாக்குத் தொழில் இல்லை.

★ ★ ★